மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரும் பான்மையானவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே ஓய்வு ஊதியம் பெற்றுவிடுகிறார்கள். சிலபேர்களைப் பொறுத்தவரையில் ஏ.ஜி. ஆபிசில் இருந்து பல விளக்கங்கள் கேட்டு வருவதனால் தாமதம் ஆகிறது. அதைத் தவிர்க்கவும் முன்கூட்டியே நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உத்தா விட்டிருக்கிறோம்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, ஓய்வூதியம் பெறுகின்றவர் கள் வயதானவர்களாகவும், உடல் வலிமை குன்றியவர்களாகவும் இருக்கின் றார்கள். அவர்கள் நேரடியாக கருவூலங்களுக்குச் சென்று பணம் பெறுவதில் துன்புறுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய துன்பத்தைப் போக்க பணவிடை மூலமாக, அவர்களுடைய வீட்டுக்குச் சென்று நேரடியாகப் பணத்தைக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சில துறைகளில் இப்பொழுது பணவிடைத்தாள் மூலமாக அனுப்பப்படுகிறது. வேறு சில துறைகளில் இதுபற்றி விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, திருக்கொச்சியில் வேலை பார்த்து தமிழகத்தோடு சேர்ந்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சில ஊழியர்கள் தமிழக அரசாங்கத்தில் பணியாற்றி இன்றைக்கு ஓய்வு பெற்றிருக் கிறார்கள். அவர்கள் ஓய்வூதியம் பெறுவதில் சில சட்டப் பிரச்சினைகள் எழுகின்றன. அவற்றைக் கூடிய சிக்கிரம் தீர்த்து, அவர்களுக்கு விரைவில் ஓய்வூதியம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. அதுபற்றித் தனியாகக் கவனத்திற்குக் கொண்டுவருவார்களானால், ஆராய்ந்து தக்க முடிவெடுக்கலாம்.

மும்முரக் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம்

*** 193 வினா—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசின் முன்னோடி தீவிரக் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில் தற்போது அமல்படுத்தப்படுகிறது ?

1973 மார்ச் 1]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மும்முரக் கிராம வேலை வாய்ப்பு முன்னோடித் திட்டம் தற்போது தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மங்களூர் வளர்ச்சி வட்டாரத்தில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

(திரு. நா. வீராசாமி தலைமை.)

திரு. எஸ். கணேசன் : தலைவர் அவர்களே, இந்தத் தீவிர கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை எஞ்சியிருக்கிற பகுதிகளுக்கு விரிவுபடுத்த அரசாங்கம் ஏதேனும் முயற்சி செய்துள்ளதா? இதை விரிவுபடுத்த மத்திய அரசை மாநில அரசு கேட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு மாநிலம் ஒன்றுக்கு ஒரு இடத்திற்குத்தான் இந்தத் திட்டத்தை அமல் படுத்த உதவி செய்கிறது. அந்தத் திட்டம் பிற்பட்ட இடமாக இருக்கிற பகுதிக்குத்தான் என்றும் அறிவிக்கப்படுகிறது. பல்வேறு காரண காரியங் களின் அடிப்படையிலே அந்த ஒரு இடம் தரப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் அது மங்களூர் வட்டாரமாக அமைந்திருக்கிறது.

திரு. சு. துரைசாமி: நம்முடைய தமிழ்நாட்டில் 300-க்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாநிலத்திற்கு ஒரு இடம் என்று ஒதுக்கியிருப்பதைக் குறைந்தது ஒரு மாவட்டத்திற்கு ஒரு இடம் என்றாவது அதிகப்படுத்த மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுபற்றி எழுதிக் கேட்டிருக்கிறோம். பரீட்சார்த்தமாக ஒரு பகுதியை எடுத்திருக்கிறோம், இது வெற்றி பெறுமானால் பின்னால் யோசிக்கப் படும் என்று கூறியிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, தீவிரக் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்படுகிறது? இதன் மூலம் என்ன என்ன வேலை வாய்ப்புகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன? இதை விரிவுபடுத்த வாய்ப்பு இருக்கிறதா இல்லையா என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேளாண்மை உற்பத்தியுடன் நேரடித் தொடர்புடைய பணிகள் : சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு/பண்ணைக்காடு. நிலத்தைப் பண்படுத்தலும் மேம்படுத்தலும், வடிகால் வசதி, கரைகள் அமைத்தல் முதலியன, நீர்ப்பாதுகாப்பும், நிலத்தடி

நீர்வளம் மீண்டும் பெருக ஆவன செய்தலும். வேளாண்மை உற்பத்திக்கு மறைமுகமாக உதவும் பணிகள் : மீன் வளர்ப்புக் குளங்கள், மேய்ச்சல் நில மேம்பாடு, மரங்கள் நடுதல், கிராம சேமிப்புக் கிடங்குகள், மற்றும் சாலை அமைத்தல், கிராமக் குடிநீர் வழங்கல், சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்க்கு வீட்டு வசதி, பள்ளிக் கட்டடங்கள் ஆகிய இப்படிப்பட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ள கிட்டத்தட்ட 2,800 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க வகை செய்யும் விதத்தில் முதல் ஆண்டு 1,000 பேரும், 2-ம் ஆண்டு 1,900 பேரும், 3-ம் ஆண்டு 2,800 பேரும் வேலை வாய்ப்புப் பெற மத்திய அரசு வழிவகை செய்திருக்கிறது. இத் திட்டத்துக்கு இந்திய அரசு 1972-73-ல் ரூ. 10 லட்சமும், 1973-74-ல் 15.79 லட்சமும், 1974-75-ல் 20.57 லட்சமும் ஒதுக்கப் போவதாக இப்போது கூறி இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிப்பதற்கு இப்பொழுது வசதியில்லையென்று சொன்னாலும்கூட, இந்த திட்டத்தைத் தொடர்ந்து ஒரே மாவட்டத்தில் பல ஆண்டுகள் அமல் நடத்துவதற்குப் பதிலாக ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாவட்டத்திற்கு இந்தத் திட்டத்தை அமுலாக்குமுறையில் மாற்றியமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ஒரு திட்டத்தையே 3 ஆண்டுகளுக்குக் கொண்டு வந்திருக்கிறோம். 2,800 பேர் வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள். அதற்குப் பிறகு இந்தப் பொறுப்பை மாநில அரசு எடுத்துக் கொள்ளுமா மத்திய அரசு எடுத்துக் கொள்ளுமா என்பது தெளிவாகவில்லை. ஏற்கனவே மாநில அரசு வைத்திருக்கிற திட்டத்தையும் மத்திய அரசுத் திட்டத்தையும் ஒன்றாக இணைத்து எடுத்துக் கொள்ளலாம் என்று நாம் ஒரு திட்டத்தினை எழுதினோம். ஆனால் இந்தத் திட்டத்தைத் தனியாக வைக்க வேண்டுமென்று மத்திய அரசு சொல்கிறது. இப்பொழுது இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டு எப்படிப்பட்ட பலன்களை அளிக்கிறது என்பதைப் பார்த்த பிறகுதான் இதைப்பற்றி யோசிக்கலாம் என்று மத்திய அரசு கூறியிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் இத்தனை இத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட இருக்கிறது என்று சொன்னார்கள். இப்பொழுது அமலாக்கப்படுகிற பகுதியில் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது? அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு இந்தத் திட்டத்தின் வாயிலாக என்ன வருமானம் கிடைக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

1973 மார்ச் 1]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 15 வயதுக்கு மேல் 59 வயதுக்கு உட்பட்டு வருகிறவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இப்பொழுதுதான் திட்டம் துவங்கப்படுகிறது. உறுப்பினர் கேட்ட விவரக் குறிப்புகள் வரவில்லை. விவரம் வந்ததற்குப் பிறகு வேண்டுமென்றால் இந்த அவையில் அவற்றை வைக்கலாம்.

திரு. இ. பொன்னுமலை : இந்த வேலை வாய்ப்புத் திட்டத்தில் மலைசாதி மக்களுக்கும் அரிசன மக்களுக்கும் அதிகச் சலுகை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மங்களூர் வட்டாரத்தில் உள்ள, வேலை செய்ய முன்வருகின்ற, தேவைப்படுகின்றவர்களுக்குப் பயன் படுகின்ற எண்ணத்தோடுதான் இது தொடங்கப்பட்டிருக்கிறது.

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலேயே பின் தங்கிய, வறட்சியால் பாதிக்கப்படுகின்ற இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அடுத்த ஆண்டு இந்த கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தை அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு மாவட்டம் வேறு பல திட்டங்கள், தீவிரத் திட்டங்கள், கிராஷ் புரோகிராம்கள் எல்லாம் இருக்கின்றன. இந்தத் திட்டம் மத்திய அரசினால் திட்டப்பட்டு நிறைவேற்றப்படுகின்ற திட்டமாகும். இதனுடைய நடைமுறையைப் பார்த்துக்கொண்டு பிறகு அதைப்பற்றி யோசிக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்த மாதிரியான திட்டங்களை மாநில அரசாங்கம், பிற்பட்ட பகுதிகளிலே அமலாக்குவதற்கு ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா? அப்படி இருந்தால் அந்த மாதிரி வேலைவாய்ப்புத் திட்டங்கள், எந்தெந்தப் பகுதிகளில் அமலாக்கப் படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட திட்டத்தை மாநில அரசு மேற்கொள்ளவில்லை. தீவிர வேலைவாய்ப்புத் திட்டத்தை நாம் மேற்கொண்டிருக்கிறோம். மத்திய அரசு 10 பிளாக்குகளில் அமல்படுத்தலாம் என்று சொன்னபொழுது மாநில அரசு மேலும் 10 பிளாக்கு களை அறிவித்து, 20 பிளாக்குகள் என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் அமல் செய்கிறோம். எல்லாப் பகுதிகளுக்கும் அமல்படுத்த வேண்டுமானால் பல

லட்சக்கணக்கான ரூபாய்களை நாம் ஒதுக்க வேண்டிவரும். ஆகவே, மத்திய அரசினுடைய உதவியின் அடிப்படையில்தான் இந்த ஒரு இடம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அவர்களிடத்திலே வற்புறுத்திப் பெறுவதற்கான முயற்சிகளை இதனுடைய அனுபவத்திலே இருந்துதான் பெறவேண்டும்.

Repatriates Co-operative Bank

*195 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the details of the purposes for which the Repatriates Co-operative Bank is giving loans; and

(*b*) the total amount so disbursed during 1971, month-wise and item-wise?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) விவர அறிக்கை ஒன்று@ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS: Sir, may I know the amount of loan outstanding for recovery?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, கொடுக்கப் பட்ட விவரங்கள்தான் இருக்கின்றன. திரும்பப் பெறவேண்டிய தொகை பற்றிய விவரம் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

11-00 மு. ப. **திரு. மு. சுருளிவேல்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளுடைய நிதி ஆதாரங்கள் முழுவதும் மாநில அரசு சம்பந்தப்பட்டதா அல்லது மத்திய அரசு சம்பந்தப்பட்டதா, அல்லது மத்திய அரசு உதவி செய்யவில்லையா? உகண்டாவிலிருந்து வெளியேற்றப்பட்ட வட நாட்டவர்களுக்கு விரைந்து உதவி செய்யும் மத்திய அரசு ஏன் இதற்கு உதவி செய்யவில்லை என்பதை மாநில அரசு தட்டிக் கேட்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தென் மாநிலங்கள் சேர்ந்து, மாநில அரசும் மத்திய அரசும் பங்கு முதலீடு செய்வதன் மூலம் இந்த வங்கிக்கு உதவி அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு இந்த வங்கியில் ரூ. 10 லட்சம் முதலீடு செய்துள்ளது.

@ 386-389-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.